30th March 1964]

*Buildings for Headquarters Hospital, Tiruthani.*

* 444 *Q*.—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to provide the headquarters hospital at Tiruthani with necessary buildings; and

(*b*) if so, when will the work be taken up?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) : The proposal to construct new buildings for the Government Hospital at Tiruthani has been deferred for the present on account of the National Emergency.

*Gur (Movement Control) Order*, 1963

*445 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the steps taken so far for the enforcement of the Gur (Movement Control) Order, 1963, in Madras State; and

(*b*) the anticipated additional expenditure both recurring and non-recurring due to this in 1963–64?

THE HON. SRI N. NALLASENAPATHI SAKARAI MANRADIAR : (*a*) & (*b*) : A statement [a] is placed on the table of the House.

*Recommendations of the Hotel Sanitation Committee*

* 447 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Hotel Sanitation Committee of 1945–47 had made recommendations to the Government for preventive measures against the infectious diseases; and

(*b*) whether the Government have any proposal to implement those recommendations?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : (அ) ஹோட்டல் சுகாதாரக் குழு 1945-47-ல் அமைக்கப்படவில்லை. ஆனால் 1950-ல் அமைக்கப்பட்டது. அக்குழு இதுபற்றிச் சில சிபாரிசுகளும் செய்தது.

(இ) இந்தச் சிபாரிசுகளையொட்டி அவசியமான உத்தரவுகள் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**திரு. ம. கமலநாதன்** : சில சிபாரிசுகள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தச் சிபார்சுகள் என்ன என்று அமைச்சர் விளக்குவார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : ஹோட்டல்களில் வேலை செய்கிற தொழிலாளர்கள் ஆண்டுக்கு ஒரு முறை மெடிகல் எக்ஸாமினேஷன் செய்துகொள்ளவேண்டும். நோயாளிகளாக

---

[a] Printed as Appendix II on

[30th March 1964

இருந்தால் சிகிச்சை பெற வேண்டும் என்றும், ஹெல்த் ஆபீசர்கள் ஹோட்டல்களைப் போய்ப் பார்வையிடவேண்டும் என்றும், சந்தேகப்படுகிற உணவுப்பொருள்களைப் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்றும் பல சிபார்சுகள் இருக்கின்றன.

**திரு. எம். எஸ். மணி :** ஹோட்டலில் வேலை செய்கிற தொழிலாளர்கள் மெடிகல் எக்ஸாமனேஷனுக்கு எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்? அதைத் தொழிலாளர்கள் கொடுக்கவேண்டுமா? நிறுவனம் கொடுக்கவேண்டுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. ம. கமலநாதன் :** ஹோட்டல்களுக்குச் சென்று பார்வை யிடும் அதிகாரி அங்கே லாவட்டரி பெசிலிடி இல்லையென்றால் லைசென்சை ரத்து செய்வார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சானிடரி பெசிலிடி சரியாக இல்லையென்பதற்காக சில ஹோட்டல்களின் லைசென்சுகள் கூட ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

**புலவர் கா. கோவிந்தன் :** ஹோட்டல்கள் சம்பந்தமாக இப்படிப் பார்வையிடுவது போலவே மாணவர்களுடைய விடுதிகள் சம்பந்தமாகவும் பார்வையிட ஏற்பாடு செய்வார்களா? சில மாணவ விடுதிகள் சுகாதாரக் கேடாக இருக்கின்றன என்பதோடு கூட சோற்றில் புழு இருக்கிறதே என்றால் நீதான் நான்-வெஜிடேரியன் ஆயிற்றே சாப்பிடு என்கிற அளவில் இருக்கிறது. அதைப் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? இல்லை யென்றால் இனியாவது ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஹாஸ்டல்களைப் பொறுத்த வரையில் வார்டன்தான் பொறுப்பு. இம்மாதிரி குறிப்பிட்ட தகவல் வந்தால் அதைக் கண்டுபிடித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். எஸ். மணி :** தொழிலாளர்களுக்கு சர்டிபிகேட் கொடுக்க நகரங்களில் உள்ள ஹெல்த் ஆபீசர்கள் ஒரு ரூபாய் கட்டணம் வசூலிக்கிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர் களுக்குத் தெரியுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அந்த மாதிரித் தகவல் ஒன்றும் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஹோட்டல் தொழிலாளர்களுடைய ஆடை அசிங்கமாக இருப்பதால் மக்கள் போய் சாப்பிடுவதற்கு அருவருப்பாக இருக்கிறது. ஆகவே, ஹோட்டல் முதலாளிகளே அவர்களுக்கு வருஷத்திற்கு இத்தனை டிரஸ் என்று கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சுகாதாரத்துடனும் சுத்தமாகவும் இருக்கவேண்டுமென்பதற்காக எல்லா ஹோட்டல் களுக்கும் ஒரே மாதிரியான உத்தரவுதான் போடப்பட்டிருக் கிறது.

**திரு. எம். எஸ். மணி :** ஹோட்டல் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உடைகள் இன்றையதினம் முதலாளி களால் கொடுக்கப்படாமல் இருக்கின்றன என்பது அரசாங்கத் திற்குத் தெரியுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அந்த மாதிரித் தகவல் ஒன்றுமில்லை.

*Buckingham Canal*

* 450 *Q.*--SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware that the condition of the Buckingham Canal is in a bad state causing injury to public health in the City of Madras; and

(*b*) what steps the Governmnt have taken in the matter?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) ஆம். சாக்கடை நிரம்பி வழியும் நிலையில் இருக்கையில் சில சமயங்களில் துர் நாற்றம் வீசுகின்றது.

(இ) சென்னை மாநகரில் வடிகால் அமைப்பை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஒன்றை அரசினர் ஏற்கெனவே அங்கீகரித் துள்ளனர். இத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்காக அண்மையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றி முடித் ததும், இந்த துர்நாற்றம் நீங்கும் என நம்பலாம்.

**திரு. எம். எஸ். மணி :** பக்கிங்காம் கால்வாயில் சிலநாட்கள் துர்நாற்றம் அடிக்கிறது; சில நாட்களில் துர்நாற்றம் அடிப்ப தில்லை. இதற்கு என்ன காரணம் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** வெயில் காலத்தில்தான் துர்நாற்றம் அதிகமாக வீசுகிறது. அதற்குக் காரணம் அந்த ஜலம் எவாப்பரேட் ஆவதுதான்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** இந்தத் திட்டத்தைப் பற்றி அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. இந்த வேலைகள் எப்போது துவங்கும் என்று அமைச்சர் அவர்கள் நிச்சயமாகக் கூறுவார் களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதற்கென்று ஒரு ஹை பவர் டெக்னிகல் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அவர் களுடைய ரிப்போர்ட்டை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ரிப்போர்ட் வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி போன்றவற்றைச் சீர்திருத்த ஒரு கோடி ரூபாய் திட்டம் போட்டிருப்பதாக அண்மையில் செய்தி வெளி வந்தது. அது பற்றி விவரம் அறியலாமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும். டெக்னிகல் கமிட்டியின் ரிப்போர்ட் வந்த பிறகு, ட்ரேட்ஜர்ஸ் வந்த பிறகு வேலை ஆரம்பிக்கப்படும்.